# FISCAL ECONOMICS
# (பொது நிதி)
## Sub Code : 18ECC508

**Dr. A. JAYAKODI**,

***Assistant Professor***

***Department of Economics,***

- Mail Id : jayakodi1973@gmail.com
- Cell : 9486564189

# UNIT-I

## MODULE : 1 INTRODUCTION

**Nature and Scope of Fiscal Economics Importance- Public finance and Private finance principles of Maximum social Advantage.**

# பொது நிதியியல் இலக்கணம் அதன் எல்லையும்

# Nature and Scope of fiscal Economics

# பொது நிதியியல் இலக்கணம்

## பேராசிரியர் ஆடம்ஸ்

- பொது நிதியால் செலவையும் பொது வருவாயையும் ஆராய்கின்றது
- அவ்வறை பொது நிதியும் பொதுச் செலவும் கவனிக்கிற பொழுது அவை குறிக்கின்ற பல வகையான தொடர்புகளை பற்றி ஆராய்வது பொதுநிதியியல் ஆகும்


## பேராசிரியர் டால்டன்

- பொது நித்தியலுக்கு புகழ்பெற்ற இலக்கணம் ஒன்றை வழங்கியுள்ளார்
- பொருளியலுக்கும் அரசியலுக்கும் இடைப்பட்ட எல்லையிலுள்ள படங்களில் பொதுநிதியும் ஒன்று
- இது பொது நிர்வாகத்தின் வருவாயும் செலவையும் அவை ஒன்றையொன்று சரிபடுத்துவது பற்றியது

# பேராசிரியர் டெய்லர்

- பொது நிதி என்பது அரசு நிறுவனத்தில் ஒரு குழுவாக கொண்ட பொதுமக்களின் தொடர்பானது।
- அரசின் நிதியோடு மட்டும் தொடர்புடையது ஆகும்।
- அரசின் நிதியியல் அரசுக்கு வேண்டிய நிதிகளை சேர்ப்பதும் செலவிடுவதும் இடம் பெறும்
- 1.இது நிதி பற்றிய அறிவியல் ஆகும் (Fiscal Science)
- 2.இதனுடைய கொள்கைகள் வரிக் கொள்கையாகும் (Fiscal Policies)
- 3.இதனுடைய வரி பற்றிய சிக்கல்கள் இதில் அடங்கும் (Fiscal Problems)

# FINANCE


Finance
Public finance
Private finance
- State government
- Central government
- Government institutions
- Personal finance
- Business finance
- Finance of non-profit organizations

# பொது நிதியின் முக்கிய பகுதிகள்

1. பொது வருவாய்
2. பொதுச் செலவு
3. பொதுக்கடன்
4. வரவு செலவு திட்டம்
5. நிதிகட்டுப்பாடும் நிர்வாகமும்

# SCOPE OF PUBLIC FINANCE




➢ Dr. A.JAYAKODI, Government College for Women (A), Kumbakonam

# பொது வருவாய்

:அரசு எவ்வாறு பல் வழிகளில் தனது வருவாய் பெறுகிறது என்பதை விளக்குகிறது.

இதில் 1. பொது நிர்வாகம் :

2. வரி விதிப்பு

3. பொதுக்கடன்

4. கட்டணங்கள்

5. தண்டப்பணம்

6. நன்கொடைகள்

7. வாணிபவருவாய்கள்

8. மானியங்கள்

போன்ற பல வருவாய் இனங்கங்கள் குறித்து விளக்குகிறது

- வரி விதிப்பதென்றால் எந்தெந்த வரியை எப்படி விதிப்பதென்பதயும்
- வரிகளை தேர்ந்தெடுக்க பின்பற்றப்படும் கொள்கையும்
- பொருளாதாரம் செயல்படுவதை அது ஏற்பாடு பாதிக்கும் என்பதயும் அறிந்துகொள்ள வேண்டும்.
- அரசு காகித பணத்தை வெளியீட்டு தனது வருவாயாக பெருக்கலாம். ஆனால் அதற்கும் அளவு இருக்கிறது. அதிலும் நல்ல விளைவுகள் கேட்ட விளைவுகள் உள்ளன.

# பொதுச் செலவு

- பொது நிதியில் பொதுச்செலவு முக்கியத்துவம் வளர்ந்து வருகிறது.
- அரசு வருவாயை பெறுவது செலவிடுவதற்க்காக.
- பொருளாதாரத்தில் நிதி ஓட்டங்கள் செவ்வனே நடைபெற அரசு தனது பொதுச் செலவுகள் மூலம் துணை செய்கின்றது
- அரசு எந்தெந்த பணிகளுக்காக எவ்வளவு செலவிடுகிறதென்பதை பொதுச் செலவின் விளைவுகளை இந்தப் பகுதி ஆராய்கிறது.

- அரசின் சில நோக்கங்களை நிறைவேற்ற பெருமளவில் அரசு பணத்தை செலவிட வேண்டியுள்ளது .
- மக்களின் குறிப்பாக ஏழ்மையானவர்கள் நலிந்தவர்கள் நலனை பேணி காக்க
- வறுமையை ஒழிக்க
- வேலைவாய்ப்பை பெருக்க
- பொருளாதார வரர்ச்சியை அடைய
- நிலையான பொருளாதரம் போக்கினை உருவாக்க
- மிகுதியாக செலவிட வேண்டியுள்ளது. இவை அனைத்தும் பொதுச்செலவு பகுதியில் அடங்கும்.

# பொதுக்கடன்

- அரசின் செலவு கூட வருவாயின் தேவை மிகுகின்றது.
- வரிவிதிப்பு போன்ற பொது வருவாய் வழிமுறைகளின் மூலம் தேவையான அளவு வருவாய் கிடைக்கின்ற பொழுது அரசு கடன் வாங்குகின்றது
- உள்நாட்டில் மட்டுமின்றி வெளி நாடுகளிலும் பெருமளவில் கடன் பெற்று பொது பணிகளை அரசு மேற்கொள்கிறது.
- பொது கடனை பெரும் பொழுது அரசு பின்பற்றவேண்டிய வழிமுறைகளையும் கொள்கையும் இந்த பகுதி ஆராய்கின்றது

# வரவு செலவு திட்டம்

- அரசின் வரவு செலவுகளை வரையறுக்கின்ற கருவியாக வரவு செலவுத் திட்டம் அமைகின்றது.
- மக்களாட்சியில் வரவு செலவுத் திட்டம் அரசின் குறிக்கோளை நிறைவேற்ற கிடைத்த ஆற்றல் மிக்க கருவியாக இருக்கின்றது
- அரசு ஆண்டுதோறும் தீட்டுகின்ற வரவு செலவுத் திட்டம்தான் அதன் பணிகளுக்கு வழிகாட்டுகின்ற ஒன்றாக இருக்கின்றது. எனவே இது பொருளாதாரத்தில் முக்கித்துவம் பெறுகின்றது.

# நிதிகட்டுப்பாடும் நிர்வாகமும்

- பொதுநிதியின் நிர்வாகமும் கட்டுப்படும் பொதுநிதி பற்றிய ஆய்வில் தனி இடம் பெறுகின்றது.
- வரவு செலவுகளை திட்டமிடுதல் திட்டப்படி எதிர்நோக்கும் பயன்கள் கிடைக்கின்ற வகையில் செலவிடுதல் தணிக்கை போன்றவைகள் இப்பகுதியில் இடம் பெருகின்றன.
- அரசு செலவுகளினால் நல்ல முறையில் பலன்கள் விளையவேண்டுமென்றால் நிதி நிர்வாகம் செவ்வனே நடைபெற வேண்டும்.

# அதிகபட்ச சமூக நன்மைக்கான கொள்கை அல்லது உச்ச நிலை சமுதாய நன்மை கொள்கை

- அரசாங்கத்தின் நிதி நடவடிக்கை ஒரு நாட்டின் உற்பத்தி, நுகர்வு, விநியோகம் மற்றும் வருமான முறை ஆகியவற்றை குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.
- சமுகத்தின் ஒட்டுமொத்த பொருளாதார நலனை அதிகரிக்க பொது நிதி செயல்படுவதை நிர்வகிக்கும் கொள்கையை அதிகபட்ச சமூக நன்மைக்கான கொள்கை.
- பேராசிரியர் AC பிகு அவர்களின் கருத்துப்படி "சமுதாயம் உருவாக்கத்தில் ஒரு உயிர் என்றால்,அரசு அதன் மூளையாகும். அரசின் பணிகளில் செலவிடுகின்ற ஒவ்வொரு ரூபாய்க்கும் சமமாக பலன் கிடைக்கும் வரை எல்லா பக்கங்களிலும் அரசின் செலவுகள் விரிவுபடுத்தவேண்டும்", அப்போதுதான் பொது செலவின் மூலம் கிடைக்கின்ற மொத்த நலன் உச்சநிலையில் இருக்கும் என்கின்றார்.

- டால்டனின் கூற்றுப்படி- பொது நிதியத்தின் சிறந்த அமைப்பு அதன் நிதி நடவடிக்கைகளிலிருந்து அதிகபட்ச சமூக நன்மைகளைப் பெறுகிறது.

- அதிகபட்ச சமூக நன்மை கோட்பாடானது பின்வருவனவற்றை அடிப்படையாக கொண்டுள்ளது.

  - அரசாங்கம் பணத்தை சேகரித்து மக்களின் நலனை அதிகரிக்க செலவிட வேண்டும்.
  - வரி விதிக்கப்படும் பொது, பயன்பாட்டு இழப்பாகவும் மற்றும் செலவு செய்யப்படும் பொது, மக்களின் பயன்பாட்டை கூட்டுகின்றது.
  - அரசாங்கம் அதன் வருவாய் மற்றும் செலவினங்களை பயன்பாட்டின் உபரி அதிகபட்சமாகவும், பயன்பாடு குறைந்த அளவிலும் சரிசெய்ய வேண்டும்.
  - அரசின் பொது செலவு கூட கூட பொது நலன் கூடும். ஆனால் முதலில் கூடுகின்ற அளவிற்கு தொடர்ந்து பொது நலன் கூடாது. குறைந்த செல் இறுதிநிலை பயன்பாட்டு விதி பொதுச் செலவிலும் செயல்படும்.

- அதிகபட்ச சமூக நன்மைக்கான கோட்பாட்டின் அனுமானங்கள்

  - அனைத்து வரிகளும் தியாகத்தில் விளைகின்றன. அனைத்து பொது செலவுகளும் நன்மைக்கு வழிவகுக்கும்.

  - பொது வருவாய் வரிகளை மட்டுமே கொண்டுள்ளது மற்றும் அரசாங்கத்திற்கு வேறு வருமான ஆதாரங்கள் இல்லை.

  - பொது செலவுகள் ஓரளவு பயன்பாட்டை குறைக்கும்.

  - அரசின் செலவுகளால் கிடைக்கின்ற நன்மைகள் மக்கள் வரி அளிப்பதால் செய்கின்ற தியாகங்களை விட மிகுதியாக இருக்க வேண்டும்.


- அதிகபட்ச சமூக நன்மைக்கான கொள்கை

  - ஒவ்வொரு கூடுதல் வரி விதிப்பின் மூலமாக மக்களின் வரி சுமை அதிகரித்துக்கொண்டே செல்கிறது, அதே நேரத்தில் நன்மைகளின் அளவு குறைந்துகொண்டே செல்கிறது. எனவே பொது செலவுகளின் மூலமாக கிடைக்கின்ற நன்மையானது அதிகபட்ச சமூக நன்மையை அடையும் வரை மேற்கொள்ளப்பட வேண்டும்.

  - அரசின் கூடுகின்ற வருவாயினால் வளர்கின்ற மக்களின் தியாக அளவையும், அரசின் கூடுகின்ற செலவினால் குறைந்த செல் நிலையில் கிடைக்கின்ற மக்களின் நலனையும் ஒரு வரைபடத்தின் மூலமாக விளக்குகின்றார்.

  - விளிம்பு சமூக தியாகம் (Marginal Social Sacrifice (MSS))- இது ஒரு கூடுதல் யூனிட் வரி விதிப்பதன் காரணமாக பொதுமக்கள் செய்த தியாகத்தின் அளவு.

  - விளிம்பு சமூக நன்மை (Marginal Social Benifit (MSB))- பொதுச் செலவினங்களின் ஒரு கூடுதல் அலகு மூலம் பொதுமக்கள் அனுபவிக்கும் நன்மை.




- OX – வரிவிதிப்பு மற்றும் பொது செலவின் அளவு.
- OY – தியாகம் மற்றும் நலனின் அளவு.
- S S1 – வளை கோடு மக்கள் வரி செலுத்துவதால் ஏற்படும் பயன்பாட்டு இழப்பை குறிக்கின்றது. பொது செலவினால் கிடைக்கும் பயன்பாட்டை குறிக்கின்றது.
- B B1 – வளை கோடு பொது செலவினால் கிடைக்கும் இறுதி நிலை பயன்பாட்டை குறிக்கின்றது.

- பொது செலவு கூட கூட இறுதி நிலை நன்மையின் அளவு B B1 குறைந்துவருவதையும், வரி வருவாய் கூட கூட இறுதி நிலை தியாகத்தின் ஆளவு S S1 கூடிக்கொண்டே போவதையும் இவ் வரை படம் காட்டுகின்றது.

- B B1 – வளை கோடு பொது செலவினால் கிடைக்கும் இறுதி நிலை பயன்பாட்டை குறிக்கின்றது.

- P1 என்ற புள்ளி வரை தியாகத்தி விட நன்மை அதிகமாக இருகின்றது. P என்ற புள்ளியில் இறுதிநிலை தியாகமும் இறுதிநிலை நன்மையும் சமமாக இருக்கின்றது.

- P1 அளவிற்கு மேல் அரசு செலவை கூட்டினால் மக்கள் செய்கின்ற தியாகம் மிகுதியாகவும் பெறுகின்ற நன்மை குறைவாக இருக்கும்.

- S P B பகுதி மக்கள் பெறுகின்ற நிகர நன்மையை பெறுகின்றது. உச்சநிலை சமுதாய நன்மை கொள்கைக்கு அடிப்படையாக இறுதிநிலை தியாகமும், இறுதிநிலை நன்மையும் அமைகின்றது என்பதனை இவ் வரைபடம் காட்டுகின்றது.

# பொது நிதியின் முக்கியத்துவம்

## importance of public finance

# நிலையான பொருளாதார வளர்ச்சி:

- ஒரு நாட்டின் நிலையான பொருளாதார வளர்ச்சி அடைய பொது நிதியானது முக்கிய பங்காற்றுகிறது
- நாட்டின் ஒட்டுமொத்த தேவை மற்றும் அளிப்பு ஆகியவற்றை அதிகரிக்க அரசின் நிதிகருவியானது அவசியமாகிறது।
- இங்கு நிதி கருவி என்பது பொது வரி பொதுக்கடன் மற்றும் பொதுச் செலவுகள் ஆகியவை அடங்கும்

# நிலையான விலைக்கொள்கை

- பணவீக்கம் மற்றும் பணவட்டத்தை கட்டுப்படுத்த அரசு பொது நிதியை பயன்படுத்துகிறது.

- பணவீக்கத்தின் பொழுது அரசு மறைமுக வரிகளை குறைக்கிறது மற்றும் பொது செலவினங்களை அதிகரிக்கின்றது ஆனால் நேரடி வரி மற்றும் மூலதன செலவினங்களை அதிகரிக்கிறது.

- அரசானது பொதுக்கடனை வாங்கி முதலீடு செய்கிறது மேற்குறிய அனைத்தும் பணவாட்ட காலத்தில் தலைகீழாக மாறும்.

# நிலையான பொருளாதாரம்

- நாட்டின் பொருளாதரத்தை நிலைப்படுத்த அரசனது பொது நிதி கொள்கையை கையாளுகிறது
- மந்த நிலையில் வரி குறைவாகவும் - செழிப்பு நிலையில் வரி அதிகமாகவும் அரசால் விதிக்கப்படுகிறது
- உள்நாட்டு கடன் உயர்த்தப்படுகிறது வெளிநாட்டு கடன் திரும்ப செலுத்தப்படுகிறது

# சம பகிர்வு

- பொருளாதார எற்ற தாழ்வுகளை குறைப்பதற்க்கு அரசானது பொது வருவாயையும் பொது செலவையும் பயன்படுத்துகிறது

- பணக்காரர்கள் வருமானத்தின் மீதும் அவர்கள் பயன்படுத்தும் ஆடம்பர பொருட்கள் மீதும் அதிக வரி விதிக்கப்பட்டு அந்த நிதியானது ஏழை மக்களுக்கு மானியன்களாகவும் பிற பணப்பலன்களையும் நேரடியாகவும் மறைமுகமாகவும் கொடுக்கிறது

# வளங்களை முறையாக பயன்படுத்துதல்

- இயற்க்கை வளங்களை மற்றும் மனித வளங்களை முறையாக பயன்படுத்துவதற்க்கு பொது நிதி முக்கியமானது
- அத்தியாவசிய பொருட்களுக்கான வரி விகிதத்தை குறைவாகவும்
- ஆடம்பர மற்றும் விரும்பத்தக்க பொருட்களுக்கான வரிகளை அதிகமாகவும் விதித்து அதனை பொதுமக்களுக்கு செலவிடுகிறது

# சமச்சீர் வளர்ச்சி

- நகர்ப்புற மற்றும் கிராமப்புற மக்களுக்கு இடையேயான வேறுபாட்டை குறைக்க அரசு பொது வருவாய் மற்றும் பொது செலவினை மேற்கொள்கிறது
- வேளாண்மை துறை மற்றும் தொழில் துறைகளுக்கான வேறுபாட்டை குறைக்க அரசு பொது வருவாய் மற்றும் பொது செலவினை மேற்கொள்கிறது
- கிராமப்புறங்களுக்கான உள்கட்டமைப்பு வசதியை அரசு மேம்படுத்துகிறது

# ஏற்றுமதியை மேம்படுத்துதல்:

- குறைந்த வரி விதித்தும் அல்லது வரியிலிருந்து விலக்கு அளித்தும் மற்றும் ஏற்றுமதி சார்ந்த பொருட்களுக்கு மானியங்களை வழங்கியும் ஏற்றுமதியை ஊக்குவிக்கிறது

# THANK YOU